https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# பௌத்த மீட்டுருவாக்க மரபில் அயோத்திதாசப் பண்டிதர்அயோத்திதாசரின் சமூகப் பணி

**முனைவர் செ. இராகுல்**
உதவிப் பேராசிரியர்
வேல்டெக் ரங்கராஜன் டாக்டர் சகுந்தலா
ஆர் & டி அறிவியல் மற்றும் மேம்பாட்டு நிறுவனம், ஆவடி

தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகவும் தவிர்க்க முடியாத ஆளுமைகளுள் ஒருவர் இவராவார். தமிழ்நாட்டிலும் கர்நாடகாவிலும் பௌத்தமதம் மீண்டும் எழுவதற்கு இவரது பணி இன்றியமையாதது. மனிதர்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்தி குழப்பத்தை விளைவிக்கும் சாதிக்கு எதிராகத் தீவிரமாகக் களமாடியவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலேயே அவரது அரசியல் பயணம் துவங்கிவிட்டது. குறிப்பாக அடித்தட்டு மக்களுக்கான விடுதலையிலும், சமயம் சார்ந்த அடிமைத்தனத்தில் இருந்து விடுபடுவது குறித்தும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் புராணக் கதைகளுக்கு எதிர் நிலை கதைகளை மீட்டுருவாக்கம் செய்யும் பணியைத் தீவிரமாக இவர் மேற்கொண்டார். துவக்க காலத்தில் அத்வைதானந்த அமைப்பை உருவாக்கினார். இதன் வழியாக மக்களிடம் சாதிய உணர்வுகளை நீக்க போராடினார்.

1888இல் அயோத்திதாசர் பி. கிருஷ்ணசாமி அவர்களுடன் கொழும்பு சென்று அங்கு ‘சுமங்கலா’ என்னும் பௌத்த சமய குருமாரின் முன்னிலையில் பௌத்தம் தழுவினார். இந்நிகழ்விற்கு ‘தம்மபாலரும் குணரத்னே’ என்பவரும் உறுதுணையாக இருந்தார். அயோத்திதாசர் பௌத்தம் ஏற்றபின்பு தீவிரமாக அடித்தட்டு மக்களிடையே பௌத்தத்தைப் பரப்பத் துவங்கினார். ‘புத்தர் என்னும் இரவு பகலற்ற ஒளி’ என்னும் நூலையும் எழுதினார். இந்நூல் பௌத்தத்தின் தேவையினையும் நியாயத்தையும் கூறுவதாக அமைந்தது. 1898இல் ‘தென்னிந்திய சாக்கைய புத்த சங்கத்தை’ நிறுவுகிறார். பின்னாளில் இதன் கிளைகள் திருப்பத்தூர், கோலார், பெங்களூர், செகந்திராபாத், ரங்கூன் உள்ளிட்ட ஊர்களிலும் துவங்கப்படுகிறது. இதன்பின்பே இச்சங்கத்தின் பெயர் தென்னிந்திய பௌத்த சங்கம் என்று பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

இச்சங்கம் தீவிரமாக பௌத்தத்தின் அடிப்படை கோட்பாடுகளான மது, இறைச்சி உள்ளிட்ட உணவுகளைக் கைவிடுதல், பஞ்சசீலம் பெறுதல், பூர்வ திராவிடர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சாதிபேதங்களைக் கைவிடுதல் உள்ளிட்டவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டது. மேலும் பூர்வக்குடி திராவிட மக்களுக்கான சமயமாக பௌத்தத்தை நிலைநிறுத்தும் பணியையும் செய்தார்.

தமிழ்நாட்டின் சமூக வரலாற்றில் பக்தி இலக்கிய காலத்திற்குப் பின்பு பெரும்பாண்மை மறைந்து போன பௌத்த சமயத்தை மறுபடியும் தமிழ்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தி அதனை ஒடுக்கப்பட்ட மக்களின் சமயமாக மீட்டுருவாக்கம் செய்தவர் பண்டிதர் அயோத்திதாசர் ஆவார்.

“மாய்கையின்றும் நீங்காதவன் மாமிஷ பட்சணத்தை வெறுத்தாலும் நிருவாணமாகச்

சென்றாலும் மொட்டையடித்துக் கொண்டாலும் சடைத் தரித்துக் கொண்டாலும் சாம்பலை பூசிக்கொண்டாலும், அக்கினி தேவனுக்கு பலி கொடுத்தாலும் பரிசுத்தவனாக மாட்டான்.

மாய்கையின்று நீங்காதவன் வேதங்களை ஓதினாலும் நெருப்பில் குளித்தாலும், நீரில் மூழ்கினாலும் அனேகச் கொடிய தவங்களைச் செய்தாலும், பரிசுத்தவனாக மாட்டான்."[1]

சமூகத்தில் வாழும் மக்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்கள் மட்டும் ஏன் ஏனைய சமூகமக்களிடமிருந்து புறக்கணிக்கப் படுகிறார்கள். அவர்கள் மட்டும் ஏன் வஞ்சிக்கப்பட்டு சுரண்டப் படிகிறார்கள் என்றக் கேள்வி அயோத்திதாசரின் மனதில் ஆழமாக எழுந்தது. இவ்வினாக்களுக்கு விடையைத் தேடி தமிழகம் முழுதும் அலைந்த அயோத்திதாசரு க்கு இரண்டு ஆதாரங்கள் கிடைத்தன.

ஒன்று நாரதீயப் புராண சங்கை தெளிவு[2] என்ற நூல். இந்நூலில், புருசிகர் என்ற நூதன சாதி இங்கு வந்தனர். அவர்களுடன் பூர்வீகமாக வாழக்கூடிய வங்க மக்கள் சண்டையிட்டனர். அச்சண்டையில் பூர்வ மக்கள் வெற்றி பெற்றனர். இக்கதையின் மூலமாக இந்நிலத்தில் காலங்காலமாக வாழ்ந்த மக்களுக்கும் வெளியில் இருந்து வந்த மக்களுக்கும் இடையே சண்டை நிகழ்ந்துள்ளதை அறிய முடிகின்றது.

இரண்டு "பார்ப்பானுக்கு மூப்பான் பறையன் கேட்பாரில்லாமல் கீழ் சாதி ஆனான்." என்ற பழமொழி பறையர் இன மக்களின் சமூக நிலையைக் காட்டுவதுடன், அம்மக்கள் பிற்காலத்தில் புறக்கணிப்புக்கு ஆளாகி இழிநிலையேற்க தள்ளப்பட்டதன் காரணத்தின் முடிச்சை அவிழ்ப்பதாகவும் உள்ளது.

இன்றைய நவீன காலத்தில் பறையர்கள் வசிக்கும் தெருவிற்குள் பார்ப்பனர் நுழைந்தால் விரட்டியடிப்பதும் சடங்கு கழிப்பதும் சாணி ஊற்றி சட்டியை உடைப்பதையும் இன்றும் நம்மால் காண முடிகின்றது. இதே நிகழ்வை பார்ப்பனர் தெருவிற்குள் பறையர் நுழைந்தால் அவர்கள் நிகழ்த்துவதையும் காணமுடிகின்றது. இவ்விரு தரவுகளும், பறையர் இன மக்கள் ஒடுக்கப் பட்டதற்கான காரணத்தை அவருக்கு விளங்க வைத்தது. இத்தெளிவின் வாயிலாக, சாதிய தோற்றத்திற்கான காரணத்தை பின்வருமாறு கூறுகிறார்.

"உலகெங்கும் சாதி வித்தியாசமென்னும், மடமையில்லாமல் சொற்பதேசமாகிய தென்னிந்தியாவில் அனந்தசாதிகள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமென்ன என்றால் புத்த மதத்தை தலை எடுக்க விடாமல் செய்வதற்கும், புருசீக தேசத்தார் தங்களை பிராமணர் பிராமணர் பிராமணரென்று உயரத்திக் கொண்டு தங்கள் சீவனத்திற்கு ஏற்படுத்திக் கொண்ட மதங்களை விருத்தி செய்வதற்குமேயாகும்"[3] இத்தெளிவிற்கு பின்பு அயோத்திதாசர் 1870இல் நீலகிரியில் தாழ்த்தப்பட்ட மக்களை இணைத்து அத்வைதானந்த சபையை தோற்றுவித்தார்.

"இச்சபையின் மூலமாக வர்ணக் கோட்பாட்டையும், சாதிய மேலாண்மையும் கூடவே கிறித்துவ மதமாற்றத்தையும் எதிர்த்து வந்த அயோத்திதாசர், சமூக விடுதலையை வேற்று மதத்தின் மூலமாக அல்லாமல், நமது தேசத்தில் வழங்கும் மதத்தின் மூலமாகவே அடைய முடியும் என்று நம்பி வந்தார்"[4] இந்நம்பிக்கை அயோத்திதாசருக்கு இம்மண்ணின் பூர்வ மக்கள் யார் என்பதை அடையாளப் படுத்தியது. பழங்குடியின மக்களும், தாழ்த்தப் பட்டவர்களும் ஆதித்தமிழர்கள் இந்நாட்டின் முதல் குடிமக்கள், பூர்வக்குடிகள் என்றும் இவர்கள் இந்துக்கள் அல்லர் என்பதையும் அயோத்திதாசர் அறிவிக்கின்றார். இதன் விளைவாகவே, 1881இல் ஆங்கிலேயர் நடத்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் கிறித்துவர், முகமதியர், சீக்கியர் தவிர்த்த ஏனைய மக்கள் அனைவரும், இந்துக்கள் என்று பதிவு செய்ய முற்பட்டபொழுது, அயோத்திதாசர் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார். ஒடுக்கப்பட்ட மக்களை ஆதித்தமிழர் என்று பதியச் சொன்னார். இவையாவும் அயோத்திதாசரின் நேரடி போராட்டங்களாக அமைந்தன.

## பூர்வ அடையாளத்தை மீட்டெடுத்தல்.

காலங்காலமாக மூளைச் சலவை செய்யப் பட்டு புறக்கணிக்கப்பட்ட மக்களின் உண்மை வரலாற்றை முதன் முதலில் ஆய்வுகளின் வாயிலாக வெளிக் கொணர்ந்தார். பலகாலமாக என் தலைவிதி என்று தன்மீது சுமத்தப்பட்ட இழிவை ஏற்றுக்கொண்டும், வேஷ பிராமணர்கள் கூறிவந்த கட்டுக் கதைகளை நம்பி வந்த மக்களடையே நீங்கள் தாழ்ந்தவர்கள் அல்ல தாழ்த்தப்பட்டவர்கள், நாம் இந்துக்கள் அல்ல இன்றைய பிராமணருக்கும் மேலாக வாழ்ந்த பௌத்தர்கள் என்ற உண்மையை உரைத்தார். இதன் மூலமாக உளவியல் ரீதியாக தனக்கு தானே தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்துடன்

இருந்தவர்களை மீண்டெழச் செய்தார். தங்கள் மீது மீண்டும் மீண்டும் இழிவை சுமத்தும் இந்து மதம் நமக்கான மதம் அல்ல நாம் பூர்வ பௌத்த மதத்தைச் சார்ந்தவர் கள் என்பதை பண்டிதர் உலகறியச் செய்தார்.

வழக்கமாக தமிழர் வரலாற்றை நாம் இலக்கியங்களில் தேடிக்கொண்டிருக்க அயோத்திதாசர் பழந்தமிழ் இலக்கியங்கள், நிகண்டுகள், பௌத்த சமய நூல்களுடன் நாட்டார் வழக்காற்றியலில் இருந்து வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தார். இத்துணைக் காலமாக வரலாற்றிற்குள் வராத மக்களை முதன்முதலில் நுழைத்தப் பெருமையும் இவரையே சாரும். நம்முடைய பண்பாட்டு வரலாற்றை எழுதியவர்கள் தங்களின் தேவைக்கேற்ப, மதம் சாரந்த வரலாற்றையே திருத்தி எழுதி நம்பவைத்து ள்ளனர். உண்மையான நமக்கான வரலாற்றை மதத்தை மீட்டுருவாக்கம் செய்து, தமிழக வரலாற்றில் தாழ்த்தப்பட்ட மக்களின் பௌத்த மதத்தின் பங்கை பண் பாட்டு வடிவத்தில் அளித்தார்.

இங்கு வாழ்ந்த பூர்வக்குடி மக்கள் பௌத்த மதத்திற்கு மாற்றப்படவில்லை மாறாக தங்களுடைய மூதாதையரை வழிபட்டுக் கொண்டே பௌத்தசமயத்தைக் கைக் கொண்டனர். அந்த வகையில் அயோத்தி தாசர் இருபதாம் நூற்றாண்டில் பௌத்தம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றை வரலாற்றுத் தரவுகளுடன் உலகிற்கு தமது இதழின் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

பார்ப்பனியம் சூழ்ச்சியின் மூலம் புத்த மதத்தின் கொள்கைகளையும் கோட்பாடு களையும், தனக்கானதாக மாற்றும் பணியில் ஈடுபட்டு அதில் சிறப்பாக வெற்றியும் பெற்றது. அவ்வாறு இந்து மதத்தால் அபகரிக்கப்பட்டு திரிக்கப்பட்ட பல நிகழ்வுகளை தக்கத் தரவுகளுடன் அயோத்தி தாசர் விளக்குகிறார். அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

## கடவுள்களின் பெயர்கள்

புத்தருக்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெயர் கள் அவரது செயல்பாட்டினை கொண்டு மக்களால் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் சில,

- மநூக்களின் அஞ்ஞான அகற்றினபடி யால், பகவனென்றும்,
- மாநுட தேகமாகிய கடத்துள்ளிருந்து ஞான ஒளியை விரித்தபடியால் கடவுளென்றும்,
- உலகமுழுமையும் தருமசக்கரத்தில் ஆண்டு வந்த படியால் ஆண்டவர் என்றும்,
- மவனத் தெறிவுற்றதால் பிரம்மன் என்றும்,
- சைவமென்னும் தன்னையறிந்தபடியால் சிவமென்றும்,
- அரசனுடைய பிள்ளையாதலின் கோபாலன் என்றும்.[5]

இதுப்போன்ற பலப் பெயர்களில் புத்தர் அழைக்கப்பட்டார்.

புத்தர் பரிநிருவானம் அடைந்த பின்பு அவரது உருவத்தை சிலையாக வடித்து விகாரங்கள் அமைத்து வழிபட்டனர். இதனை மாற்றி புத்தரின் ஆயிரம் நாமங்களை அபகரித்துக்கொண்டு ஒவ்வொரு பெயரிற்குப் பின்பும் ஓர் புராணக் கதையை சேர்த்து அதன் மூலம் வயிற்றுப் பிழைப்பு நடத்தி வருகின்றனர்.[6] என்கிறார் அயோத்தி தாசர். இந்நிகழ்வை இந்துமதக் கடவுள்களின் இன்றைய புராண வடிவங்களை நோக்கும் போது நமக்கு தெளிவாகவே தெரிகிறது. அக்கதைகள் யாவும் இயற்கைக்கு முரணான நிகழ்வுகளையே கொண்டுள்ளது.

## கார்த்திகை தீபம் – கார்த்துல தீபம்.

இத்திருவிழாவிற்கு பண்டிதர் புதுமையான தொரு விளக்கத்தை அளிக்கின்றார். பண்டையக் காலங்களில் இரவில் வெளிச் சத்திற்கான நெருப்பு பயன்பாடு என்பது அனைவருக்கும் ஒன்றானதாக இருந்த தில்லை. அந்நிலையில் அனைவருக்கும் பயன்படும் வகையில் ஓர் பௌத்த துறவி நின்று நிதானமாக எரியக்கூடிய ஒளிக்கான நெய்யை ஆமணக்கு விதையில் இருந்து கண்டுபிடித்தார். அக்கண்டுபிடிப்பைக் கொண்டாடும் விதமாக உருவாக்கப்பட்டதே தீப ஒளி நன்னாள் ஆகும்.

மலையின் மீது ஏற்றப்படும் ஒளியை அண்ணாந்து மலை என்றழைத்தனர் அதுவே பிற்காலங்களில் அண்ணாமலையாக மாறியது. கார்த்திகை என்பது கார் – இருள், இல – நீக்குதல், இருளை நீக்குதல் என்றப் பொருளில் கார்த்துல தீபம் என்ற ஒன்றே கார்த்திகை தீபம் என்று மாற்றப்பட்டு அதற்கு அறிவியல் பூர்வமாக பொருந்தாத புராணத்தை இணைத்து கொண்டாடப்பட்டு வருகின்றது. இதேக் கட்டமைப்பில் உடல் சூட்டை தடுக்கும் நல்ல எண்ணையான எள் நெய் கண்டுபிடிக்கப்பட்ட நாளை தீப ஒளி நன்னாளாக கொண்டாடப்பட்டதை, தன்வயப்படுத்திக்கொண்ட பார்ப்பனியம், அறிவிற்கு ஒவ்வாதக் கதையை உருவாக்கி

மன்னர்களின் உதவியோடு நடைமுறைப் படுத்தியதையும் பண்டிதர் தோலுரித்துக் காட்டியுள்ளார்.

## நாட்டார் தெய்வங்கள்

இன்று வைதீகத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டும் பெரும்பாலான கிராமப்புற மக்களால் வழிபடுவதுமான நாட்டார் தெய்வங்கள் வைதீகத்தின் புராணக் கடவுள்களுடன் நேரடித் தொடர்பை புராணங்களின் மூலம் அளித்து அத்தெய்வங்களையும் இந்து மதத்தின் அங்கமாக மாற்றிக்கொண்டனர். இதைக் கடுமையாக எதிர்த்தப் பண்டிதர் "பூர்வ காலத்தில் அரசமரத்தடியில் செங்கல் வைத்து வழிபட்டனர் 'முத்தன், முனியன், கருப்பன், முனியப்பன், செல்லன்' போன்றவை புத்தரின் ஆயிரம் நாமங்களில் ஒன்று"[7] இத்தெளிவின் வாயிலாக ஒன்றைப் புரிந்து கொள்ள முடிகின்றது. அது நாட்டுப்புற மக்களிடையே பௌத்தம் தொடர்பான சடங்கு முறைகள் இன்றும் அதை பௌத்தச் சடங்குகள் என்று அறியாமலேயே பின்பற்றப்பட்டு வருகின்றது. அரசமரத்தடியில் செங்கல்லை நட்டு வழிபடுவது, திருமணச் சடங்கில் அரசாணிக்கால் நடுவது, தங்களது பெயரில் முனியன், முனியப்பன், தருமன், சாத்தன் போன்றப் பெயர்களை இணைத்துக் கொள்வதை நம்மால் காண முடிகின்றது.

பிராமணியத்தின் மிகப்பெரிய உத்தியே தன்னை எதிர்ப்பவர்களை, கீழானவர்கள் ஆக்குவது அல்லது தன்வயப்படுத்துவது,[8] இவ் உத்தியை தெளிவாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதை மயிலை சீனி வேங்கடசாமி தனது தமிழும் பௌத்தமும் என்ற நூலில் பௌத்தத்தில் இருந்து வைதீகம் தன்வயப் படுத்திக் கொண்டதை பட்டியலிடுகின்றார்.

1. புத்தரைத் திருமாலின் ஓர் அவதாரமாகக் கொண்டது,
2. மணிமேகலா, சம்பாதி, தாரா, பெண் தெய்வங்கள் காளி, பிடாரி, திரௌபதி என மாற்றியது.
3. யாகத்தில் உயிர்க்கொலையை நீக்கியது.
4. அரசமரத்தை தொழுவதை ஏற்றது.

இதுப்போன்ற பல நிகழ்வுகளை தக்க ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார்.

## இலக்கியச் சான்றுகள்

19, 20ஆம் நூற்றாண்டுகளில் அச்சு ஊடகங் களின் வருகையினாலும், உரைநடையின் வளர்ச்சியினாலும், எழுந்த சைவ, பிராமண வேளாளர்கள் சைவத்திற்கான வரலாற் றையே தமிழ், தமிழருக்கான வரலாறாகத் திரித்து எழுதி அனைவரையும், நம்ப வைத்துள்ளனர். அவர்களது பொய்களை தக்க ஆதாரங்களுடன் அயோத்திதாசர் அம்பலப்படுத்தியுள்ளார்.

காலங்காலமாக நமது பொது புத்தியில் படிந்த பொதுவான வரலாறு என்பது யாரோ ஒருவர் தமது சமயத்திற்குட்பட்டு எழுதியவை, அவற்றை நாம் இன்று வரை யிலும் கேள்விக்குட்படுத்தாமல் யாருக்கான வரலாறு என்பதை அறியாமலேயே ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

தமிழ் இலக்கியங்களை வைதீக சமயச் சாயங்களை நீக்கி அவை அவைதீகமான பௌத்தமதத்திற்குரியன என்பதை பண்டிதர் உரைக்கிறார். மேலும் அவர் மேற்கொண்ட முக்கியமான ஆய்வுகளில் ஒன்று சொல்லா ராய்ச்சி ஆகும். அந்தவகையில், 'ஏற்பதிகழ்ச்சி' என்ற சொல்லிற்கான பொருளாக அவர் குறிப்பிடுவது எவரொருவர் சொல்லும் வார்த்தையை விசாரணையின்றி ஏற்றுக் கொள்வது இழிவு என்றார்.

கோத்திரம், கோ – அரசன், திறம் – வல்லமை.

'பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்பது, பௌத்த துறவிகளின், ஓடறிந்து பிச்சையிடு என்பதாகும்.

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது அவரவர் செய்யும் கன்மபலனை அவனவனே அனுபவித்துத் தீரவேண்டுமேயன்றி ஓரணுவேனும் மற்றவரால் அகற்ற முடியாது என்பதே இதன் பொருள் என்கிறார். திருக்குறள் என்பது திரிக்குறள் என்கிறார். திரி என்பது மூன்று திரிபீடகத்தின் சார்பு நூலே திருக்குறள் ஆகும். அதே வகையில் திரிமந்திரம், திரிவாசகம் (ஔவை), திரி வெண்பா, திரிமாலை, திரிகடுகம், சித்தர்நூல் போன்றவைகள் திரிபீடகத்தின் சார்பு நூல்கள் என்றே பண்டிதர் குறிப்பிடுகிறார்.

## வைதீக கருத்துக்களுக்கு மறுப்புரை

உரையாசிரியர்கள் மேற்கொண்ட வைதீக திரிபுகளை அயோத்திதாசர் மறுத்துரைத்து ள்ளார். "1831இல் வெளிவந்த திருக்குறள் பதிப்பில் வள்ளுவர் பார்ப்பானுக்கும் பறைச்சிக்கும் பிறந்தவர் என்ற கட்டுக்கதை இடம் பெறவில்லை. 1835இல் வெளிவந்த விசாகப்பெருமாள் பதிப்பிலும், அவர் தம்பி சரவணப்பெருமாளையர் பதிப்பிலும் இந்த கதை முதன்முதலாக இடம் பெற்றது."[9] என்ற குறிப்பு வரலாற்றை எவ்வாறு திரித்துள்ளனர் என்பதை நமக்கு காட்டுகின்றது.

'லோகோபகாரி' (16.10.1912) இதழில் இராமருக்குப் பின்பே புத்தர் தோன்றினார் என ஒரு வைதீகர் எழுதியதை அயோத்தி தாசர் உடனடியாக மறுத்துரைத்துள்ளார். வால்மீகி இராமயணத்தில் இலங்கையில் சீதையைத் தேடிய அனுமார் ஓர் கோபுர உச்சியிலிருந்து இது பௌத்தர்களது விஹாரமோ? என்று பேசும் பகுதியை தாசர் எடுத்துக்காட்டியுள்ளார்[10] என்பது போன்ற நிறைய மறுப்புரைகளை அயோத்திதாசர் அவரது சம காலத்திலேயே கூறியுள்ளார்.

## அயோத்திதாசரின் பௌத்த மீட்டுருவாக்கக் களப்பணி.

பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்தது மட்டுமல்லாமல் அவற்றை நடைமுறை மக்களிடையே கொண்டு சேர்க்கும் பணியையும் சிறப்பாகச் செய்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்.

* 1917, 1920, 1932, 1952 ஆகிய ஆண்டுகளில் பல ஊர்களில் பௌத்த மாநாடுகளை நடத்தினார்.
* பௌத்தத்தின் இரண்டு உட்பிரிவுகளான தேராவதம், மகாயாணம், இரண்டையும் தவிர்த்து முற்றிலும் புதிய தமிழ் முறையிலமைந்த பௌத்தத்தை மீட்டுருவாக்கம் செய்தார்.
* 1896, 98இல் ஆல்காட்டை சந்தித்து புத்த விகாரையும், பௌத்த சங்கமும் நிறுவ ஒத்துழைப்புக் கேட்டார்.
* பெங்களூர், கோலார், திருப்பத்தூர், செகந்திராபாத், ரங்கூன், தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகளில் சங்கத்தின் கிளைகளைத் தோற்றுவித்தார்.
* பார்பணியத்திற்கு எதிர் மதமாக கட்டமைக்கப்பட்டதே பௌத்த மதம் என்பதை எடுத்துரைத்தார்.

இவ்வாறான பல நடவடிக்கைகளை நடைமுறை வழ்வில் பண்டிதர் மேற்கொண்டார்.

## முடிவாக

பண்டிதரின் காலக்கட்டத்தில் பிரமாண்டமாக பரவி சாதியத்தின் துணையுடன் தீவிரமாக களமாடிய வைதீகத்தை தனி ஒரு ஆளாக எதிர்த்து நின்றார். அன்று அவரது குரல் அப்பெருங்கூச்சலில் கரைந்தாலும் சில காலம் வெளியில் தெரியாமல் இருந்தாலும் இன்று அக்குரல் இச்சமூகத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் மீட்டுருவாக்கம் செய்து சமூத்திற்கான மிக முக்கிய மாற்றுவழியை காட்டிக் கொண்டிருக்கின்றது.

பண்டிதரின் காலக்கட்டத்தை உருவகித்துக் கொண்டு அக்காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளுடன் அவரது எழுத்துக்களை உள்வாங்கினால் மட்டுமே அவரை முழுமையாக உணர முடியும். அயோத்திதாசர் எந்தவொரு புதிய நிகழ்வுகளையும் நிகழ்த்தவில்லை ஏற்கனவே இந்திய வரலாற்றில் இருந்து திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு இருந்த வரலாற்றை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

மக்களுக்கான உண்மை வரலாற்றை மக்களிடமுள்ள தொன்மங்களைக் கொண்டு வந்த பெருமை இவரையேச் சாரும். ஒடுக்கப்பட்ட மக்களின் ஆன்மீகத்தை முதன் முதலில் உரைத்தப் பெருமை இவரையேச் சாரும்.

ஏனைய மதங்கள் யாவும் நாயக உருவாக்கத்தை முதன்மையாகக் கொண்டுள்ளன. அதை உடைத்து சக மனிதர்களை நாயகர்களாகக் கொண்ட பௌத்த மதமே சமத்துவத்திற்கான மதமாகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் மதமாகவும் இருக்க முடியும் என்பதை ஆய்வின் வாயிலாக எடுத்துரைக்கின்றார். இன்று தாழ்த்தப்பட்ட நிலையில் இருப்பவர்கள் தொடக்கத்தி லிருந்து அந்நிலையில் இருப்பவர்கள் அல்லர். அவர்கள் திட்டமிட்டு அந்நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள். அந்நிலையில் இருந்து அவர்கள் மீண்டெழுவதற்கு பௌத்தம் ஒரு சிறந்த வழியென்பதை பண்டிதர் இறுதி வரை உணர்த்திச் சென்றார்.

## மேற்கோள் விளக்கம்.

1. அலாய்சியஸ் ஞான., அயோத்திதாசர் சிந்தனைகள் (தொகுதி – 2). ப.15 நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை–627002. முதற் பதிப்பு – 1999.
2. வீ.கருப்பையா, அயோத்திதாரசரின் தமிழ்ப்பணி. ப.9 முனைவர் பட்ட ஆய்வேடு 2009.
3. மேலது ப.19.
4. ஸ்டாலின் இராஜாங்கம், நான் பூர்வ பௌத்தன். ப.30
5. அலாய்சியஸ் ஞான., அயோத்திதாசர் சிந்தனைகள் (தொகுதி–2). ப.17, 18, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை–627002. முதற்பதிப்பு – 1999.
6. ராஜ் கௌதமன், க.அயோத்திதாசர் ஆய்வுகள். ப 136.
7. மேலது ப.136
8. மேலது ப.118
9. மேலது ப.118
10. மேலது ப.129.